7. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —தொடர்ச்சி.

(ஈ) நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல் ஒத்தி வைக்கப்படுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட்டிற்கு இப்பேரவையிலிருந்து மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு நான்கு வேட்பாளர்கள் தங்கள் வேட்பு மனுக்களைக் கொடுத்து இருக்கிற காரணத்தால், இன்று தேர்தல் நடைபெற வேண்டியிருந்தது. ஆனால் இன்று மானியக் கோரிக்கைகள் எல்லாம் விவாதம் முடிவுற்று 1.30 மணிக்குள் இங்கே மானியக் கோரிக்கைகள் அனைத்தும் வாக்கெடுப்புக்கு விடவேண்டிய அளவிற்கு 'கில்லெட்டின்' நாளாக இருந்த காரணத்தாலும், வேறு பிரச்சினைகள் இங்கே எழுப்பப்பட்டு, அவை உறுப்பினர்கள் அனைவரும் இங்கே கவனம் செலுத்திக் கொண்டிருந்த